Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

# Definition and Elements of Minor Literary Forms

**Dr. T. Christal Rejee**, Assistant Professor, Department of Tamil, Bharath Institute of Higher Education and Research, Chennai, Tamil Nadu, India.

**ORCiD: https://orcid.org/0009-0002-9604-8350**

Received: 1 April 2025; Revised: 25 April 2025; Accepted: 2 June 2025; Available Online: 30 July 2025.

## Abstract

*Literature should provide readers with a sense of aesthetic pleasure. Its true purpose lies in expressing the socio-political, economic, and cultural dimensions that extend beyond beauty and style. In this regard, literary fiction attains its highest value, for it reflects contemporary issues, social concerns, and prevailing trends of thought. By doing so, it becomes an artistic endeavour and also mirrors the human condition and collective experience. The concept of literary fiction is closely aligned with the northern term Prabandham and it has been explored and redefined across centuries. This form of writing goes beyond ornamental expression by embracing a broader canvas where human emotions, social realities, and cultural practices find representation. Minor Literature includes Ula, Thoothu, Bharani, Pillaithamizh, Andathi, Attrupadai, Kaiyaru Nilay, Madal Kuravanji etc. Sangam literature has served as a guiding light for such developments. It provided the foundation for later works of literary fiction to flourish and to inspire many generations of writers. Hence, this article examines the elements in detail by highlighting the significance of literary fiction in shaping thought and society.*

**Keywords:** Minor Literature, Bharani, Thoothu, Madal, Kuraththi Song.

## References

[1] Eeswarapillai, T. *Thamizhil sitrilakkiya Varalaru Part 1*. 2005.
[2] Srinivasan, R. *Thamizh Ilakkiya Varalattru Katturaigal*. 1997.
[3] Selvaraj, N. *Irubatham Nootrandu Sitrillakiyangal*. 2019.
[4] Tamilannal. *Puthiya Nookil Thamizh Ilakkiya Varalaru*. 1980.
[5] Marx, A. *Sitrillakiyangal- sila Kurippugal*. 2007.
[6] Vimalanandam, Madhu. S. *Thamizh Ilakkiya Varalaru*. 2004.
[7] *Tamil Adon Dictionary*, 2010.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*

37

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

# சிற்றிலக்கிய வரையறையும் கூறுகளும்

**முனைவர் த. கிறிஸ்டல் ரெஜி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0002-9604-8350

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியம் என்பது தனது வாசகர்களுக்கு வெறும் அழகியல் உணர்வை மட்டும் தருவதாக அமைதல் கூடாது. அதற்கப்பால் காணப்படுகின்ற சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டுக் கூறுகளை வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும். அவ்வகையில் சமகாலச் சிக்கல்களையும் எண்ணப் போக்குகளையும் எதிரொலித்துக் காட்டுவதில் சிற்றிலக்கியங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. பிரபந்தம் என்ற வடசொல்லுக்கு நிகரான சிற்றிலக்கியம் என்ற சொல் உணர்த்தும் சிற்றிலக்கிய வரையறை ஆராய்கின்றது. பிற்காலங்களில் தோன்றி சிறந்து விளங்கிய சிற்றிலக்கியங்களுக்கு வழிகாட்டியாக சங்க இலக்கியங்கள் இருந்துள்ளன. இதில் சிற்றிலக்கிய கூறுகளான உலா, தூது, பரணி, பிள்ளைத்தமிழ், அந்தாதி, ஆற்றுப்படை, கையறுநிலை, மடல் குறவஞ்சி போன்ற பல்வேறு செய்திகள் சான்றாக அமைந்துள்ளது. இவைக் குறித்து விரிவாக இக்கட்டுரையானது எடுத்துரைக்கின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** சிற்றிலக்கியம், பரணி, தூது, மடல், குறத்திப்பாட்டு

**முன்னுரை**

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளில் ஒன்றோ பலவோ குறைந்து வரின் அதனை சிற்றிலக்கியம் என்பர்.அத்தகைய சிறப்புப் பொருந்திய இலக்கியத்திற்கான வரையறையை சிற்றிலக்கியம் சிறப்புறப் பெற்று விளக்குகிறது.அது போன்றுசிற்றிலக்கிய வகைகளின் கூறுகளும் சங்கப் பாடல்களில் விரவிக் கிடக்கின்றன.குறிப்பாக சங்கப் பாடல்களில் இடம் பெற்றுள்ள பரணி தூது மடல் குறம் கார் ஆற்றுப்படை கையறுநிலை ஆகியனவற்றில் சிற்றிலக்கியக் கூறுகள் இடம் பெறும் விதம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

**சிற்றிலக்கியம்- சொல் வரலாறு**

சோழர் காலத்தில் தொடங்கி அவர்களுக்குப் பிறகு தமிழகத்தை ஆண்ட நாயக்கர் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சிற்றிலக்கியங்கள் எனப்படுகின்றன. 'சிற்றிலக்கியம்' என்ற சொல்லாட்சி வழக்கிற்கு வருவதற்கு முன்பு 'பிரபந்தம்' என்ற வடமொழிச் சொல்லாட்சி காணப்பட்டது. 'பிரபந்தம்' என்ற சொல்லுக்கு நன்கு கட்டப்பட்டது என்பது பொருளாகும். கி. பி. 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அடியார்க்கு நல்லார் உரையில் “பிரபந்தம் என்பது அடிவரையறையின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது” என்று குறிப்பிடப்படும் கருத்தும் இங்கு நோக்கத்தக்கது. பொதுவாக எல்லா இலக்கியங்களும் நன்கு கட்டப்பட்டவையே. எனவே “பிரபந்தம்” என்ற சொல் சிற்றிலக்கியத்தை மட்டும் குறிக்கவில்லை என்பதை ஊணர்ந்து “சிறு பிரபந்தம்” எனும் சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினர். பின்னர் தமிழ் மொழியின் மீதுள்ள ஆர்வம் காரணமாக “சிற்றிலக்கியம்” என்ற சொல்லாட்சி பயன்படுத்தப்பட்டது. இத்தகைய சிற்றிலக்கியச் சொல்லாட்சி பற்றிக் கூறுகையில் “உரிச்சொல் என்பதன் இடத்தை நிகண்டு என்பது குறித்துள்ளது போல் சிறுகாவியங்கள் சிற்றிலக்கியங்கள் என்ற பொருளில் பிரபந்தம் பெருவழக்காயிற்று” (தா. ஈசுவர பிள்ளை, ப. 48) என்று தா. ஈசுவர பிள்ளை எடுத்துரைத்துள்ளார்.

இடைக்காலத் தமிழக வரலாற்றில் பிரபந்தம் எனக் காணப்படும் சொல்லாட்சி பின்னர் “சிற்றிலக்கியம்” என்றும் “சிறு காப்பியம்” என்றும் வழங்கலாயிற்று. தண்டியலங்காரம்

**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

காப்பியம் என்றும் பெருங்காப்பியம் என்றும் பாகுபடுத்தி இலக்கணம் கூறுகின்றது. "வடமொழி இலக்கணம் வழித் தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்தியதன் விளைவாகவே "சிறுகாப்பியம்" எனும் சொல் வழங்கப்பட்டுள்ளது. அதனால் சிற்றிலக்கியம் என்ற பெயர்ப் பொருத்தத்தை விடப் பரணி இலக்கியம் உலா இலக்கியம் பள்ளு இலக்கியம் எனச் சுட்டப் பெறுவது தகவுடையது" என்ற கருத்தும் சிற்றிலக்கியச் சொல் வரலாற்றில் குறிப்பிடத் தகுந்தது. "பிரபந்தம்" என்னும் வடமொழிச்சொல் பிற்காலத்தில் மறைய "சிற்றிலக்கியம்" என்ற சொல்லாட்சி நிலைபெற்றது" (தா. ஈசுவர பிள்ளை, ப. 48)

**சிற்றிலக்கியம் - விளக்கம்**

சிற்றிலக்கியம் என்னும் இலக்கிய வகை பற்றி அறிஞர்களின் பல்வேறு கருத்துக்களைக் காண இயலுகிறது. "பிரபந்தம் என்பது தொண்ணூற்றாறு வகைப்பட்ட நூல்" (தமிழ் அடோன் அகராதி. ப. 78) என்று அகராதி பொருள் தருகிறது. மேலும் ரா. சீனிவாசன் பிரபந்தம் பற்றி எடுத்துரைக்கையில் "காவியத்தின் ஒரு கூறாகிய ஒரு துறை மட்டும் பாடப்படுவது பிரபந்தம்" (ரா. சீனிவாசன், ப. 60) என்று சுட்டியுள்ளார்.

தா.ஈசுவரப்பிள்ளை சிற்றிலக்கியத்திற்கு விளக்கம் தருகையில் "குறைந்த எண்ணிக்கையுடைய பாடல்களைக் கொண்டும் எண் வகை யாப்பினாலும் குறிப்பிட்ட அமைப்பு நிலையினாலும் படைக்கப்பெறும் இலக்கிய வகையே சிற்றிலக்கியம்" (தா.ஈசுவரப்பிள்ளை, ப. 48) என்று எடுத்துரைக்கின்றார்.

சிற்றிலக்கியத்தின் உள்ளடக்கம் பற்றிக் குறிப்பிடுகையில் "சிற்றிலக்கிய வகைகள் நெடும்பாட்டு போல்வன. முற்ற முடிந்த ஒரு குறிப்பிட்ட பொருளின் மேல்வன... சங்க காலத்துப் பாட்டுக்கள் போலக் குறிப்பிட்ட இறைவனை மன்னனை வள்ளலைப் பற்றிப் புகழ்வதற்காக சிறப்பாக எடுத்துரைப்பதற்காக ஏழுதப்பட்டன" (தமிழண்ணல், ப. 47) என்று தமிழண்ணல் எடுத்துரைக்கின்றார்.

"பேரிலக்கியங்கள் அறம் பொருள் இன்பம் வீடு நான்கும் உணர்த்தும். இவற்றில் ஒன்றோ பலவோ குறைந்துவரின் அவை சிற்றிலக்கியங்களாம். பின்னை நாளில் புற்றீசல் போன்று கிளர்ந்த இந்நூல்கள் 96 வகையாகக் கொண்டு இவற்றிற்கேற்ப இலக்கணம் வகுத்தனர்" (மது. ச. விமலானந்தன், ப. 72) என்ற மது. ச. விமலானந்தன் கருத்தும் குறிப்பிடத்தக்கது.

**சிற்றிலக்கியத்தின் தோற்றத்திற்கு தொல்காப்பியம் ஓர் அடித்தளம்**

சிற்றிலக்கியத்தின் தோற்றத்திற்குரிய தொன்மை வரலாற்றை அறிவதற்குத் தொல்காப்பியம் அடித்தளமாக அமைகின்றது. காலந்தோறும் மக்களின் தேவைக்கேற்ப கவிஞரின் கற்பனைக்கேற்ப இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே வருகின்றன. இக்கருத்திற்கு வலிமை சேர்க்கும் வகையில் தொல்காப்பியர் புதியனவாக எழும் இலக்கிய வகைகளைப் போற்ற வேண்டும் என்ற நிலையில் "விருந்து" என்னும் வனப்பினைப் படைத்துள்ளார்.

**விருந்தே தானும்**

**புதுவது கிளந்த யாப்பின் மேற்றே (தொல்., செய்., 239)** என்ற நூற்பா எதிர்காலத்தில் தோன்றக்கூடிய இலக்கியங்களையும் கற்றுக் கொள்ள வழிகாட்டுகிறது என்றே பொருள் கொள்ள வேண்டும். பேராசிரியர் இதற்கு உரை கூறுகையில் "புதுவது கிளந்த யாப்பின் மேற்றே என்றது என்னையெனின் புதிதாகத் தாம் வேண்டியவற்றால் பல செய்யுளும் தொடர்ந்து வரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும் பொய்கையார் முதலானோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க. கலம்பகம் முதலியனவும் சொல்லும்" என்று விளக்கம் தந்துள்ளார். எனவே சிற்றிலக்கியத் தோற்றத்திற்கு அடிப்படை வித்து தொல்காப்பியத்தில் காணக் கிடக்கின்றது எனலாம்.

**குழவி மருங்கினும் கிளவதாகும் (தொல்., பொருள்., புறத்திணையியல். 82)**
**எரொடு தோற்றமும் உரித்தென மொழிப (தொல்., பொருள்., புறத்திணையியல். 83)**
**கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்**

**ஆற்றிடைக்காட்சி உறழத் தோன்றிப்**
**பெற்ற பெருவளம் பெறார்க்கு அறிவுறீஇச்**
**சென்று பயனெதிர்ச் சொன்ன பக்கமும் (தொல்., பொருள்., புறத்திணையியல். 36)**

என்ற தொல்காப்பிய நூற்பாக்கள் தரும் செய்திகள் முறையே பிள்ளைத்தமிழ் உலா ஆற்றுப்படை என்னும் சிற்றிலக்கிய வகைகளாகப் பிற்காலத்தே உருப்பெற்றன என்ற கருத்து நிலவுகின்றது. அதனைப் போன்றே தொல்காப்பியர் புறப்பொருள் துறைகளாகக் குறிப்பிடும் களவஞ்சி காஞ்சி மாலை நொச்சி மாலைபுறநிலை வாழ்த்துவாயுறை வாழ்த்து இயன்மொழி போன்ற இன்ன பிறவும் பிற்காலத்தே அவ்வப் பெயர்களிலேயே சிற்றிலக்கியங்களாகத் திகழ்வதைக் காண முடிகின்றது. எல்லா வகை இலக்கியத்திற்கும் தொன்மையைத் தேடிக் காண்பது தமிழருக்குரிய ஒரு மரபாகும். அவ்வகையில் மேற்கூறப் பெற்ற கருத்துக்களின் மூலம் சிற்றிலக்கிய வகைகள் தொல்காப்பியம் என்ற தொன்மை நூலுடன் தொடர்பு கொண்டுள்ள பாங்கினை அறிய இயலுகின்றது.

**சிற்றிலக்கியம் தோற்றத்திற்கான காரணிகள்**

தமிழ் இலக்கியங்கள் யாவுமே அவை தோன்றிய காலத்து அரசியல் நிலை சமுதாயச் சூழல்மக்களின் கருத்தோட்டம் கலையுணர்வு முதலியவற்றை அடிப்படைக் காரணிகளாகக் கொண்டுள்ளன. அவ்வகையில் தமிழில் தோன்றியுள்ள சிற்றிலக்கியங்களில் தமிழகம் பற்றிய அக்கால அரிய செய்திகள் பலவற்றை அறிய முடிகின்றது. இத்தகைய சிற்றிலக்கியத்தின் தோற்றத்திற்கான சூழல் குறித்து ஆ. மார்க்ஸ் குறிப்பிடுகையில் “பேரரசுகளை உருவாக்கிக் கட்டிக் காத்து அரசியல் நிர்வாகம் செய்வதிலும் வாழ்க்கையில் பெரும் பகுதியைப் போர் செய்வதிலும் கழித்திருந்த பேரரசர்கள் இடையிடையேக் கேட்டு மகிழச் சிறு பிரபந்தங்களே தகுதியாக இருந்தமையால் காவிய காலத்தில் சிற்றிலக்கிய வடிவங்கள் தோன்றிப் பின்னர் வளர்ந்தன” (ஆ. மார்க்ஸ். ப. 23) என்று குறிப்பிடுகின்றார்.

மேலும் சிற்றிலக்கியத் தோற்றத்திற்கான சூழலினை எடுத்துரைக்கையில் 13ஆம் நூற்றாண்டிற்குப் பின் தமிழகம் அன்னியர் ஆட்சியில் இருந்தது. அவர்கள் மொழியே செல்வாக்குப் பெற பைந்தமிழ் புறக்கணிக்கப் பெற்றது. புலவர்கள் போற்றுவாரின்றித் திக்கற்று நின்றனர். வாழ்வே குலைந்து நிற்கும் போதுவளமார் காவியங்களோவகையான இலக்கியங்களோ தோன்ற முடியுமா? செந்தமிழ்ச் சிறப்பறியா சிற்றின்பச் சிந்தை மிக்க சிற்றரசர்கள் மற்றும் செல்வந்தர் கை பார்த்து இருந்தனர் கவிஞர்கள். காலத்தின் கோரப்பிடியிலே சிக்கித் தவித்த கவிஞர்கள்அவர்கள் உளம் மகிழவே சிற்றிலக்கியங்கள் பல செய்து வயிற்றுப் பாட்டைக் கவனித்தார்கள். தமிழன்னையை அணி செய்யத் தரமான இலக்கியம் யாத்த நிலைபோய்தனிப்பட்டோரைப் பாராட்டிப் பயன் பெறுதற்காகப் பிரபந்தங்கள் பல பாடினர் என்று இலக்கிய வரலாற்றாசிரியர்கள் கூறிச் செல்வர்.

மேற்கூறப்பெற்ற சூழலில் உருவாகிய சிற்றிலக்கியம் பல வடிவங்கள் பெற்றமைக்கான காரணிகளை தா. ஈசுவரப்பிள்ளை பின்வருமாறு பகுத்துக் கூறியுள்ளார். அவை:

1. **சமுதாய மாற்றம் காரணமாக புதிய இலக்கிய வகைகள் பல தோன்றுதல்.**
2. **சங்க அகப்பொருள் துறைகளைத் தனி இலக்கியமாகப் படைக்கும் வேட்கை அதிகரித்ததன் விளைவு.**
3. **அகப்பொருள் போன்றே புறப்பொருள் துறைகளையும் தனி இலக்கியமாகப் படைக்கும் ஆர்வம்.**
4. **மரபு வழியாக வந்த இலக்கிய வடிவங்களை இணைத்துப் புதிய இலக்கியம் படைக்கும் எண்ணம்.**
5. **தல இறைவனைப் புகழும் நோக்கத்துடனும் இறைவனின் சிறப்பை எடுத்து இயம்புதல் மூலம் மக்களின் சமய உணர்வைத் தூண்டும் வேட்கையுடனும் இலக்கியம் படைத்தல்.**

6. **வாழ்வியல் நிகழ்வுகளைப் பதிவு செய்யும் எண்ணத்துடனும் ஓர் இலக்கியத்திற்குப் போட்டியாக மற்றொரு இலக்கியத்தைப் படைக்கின்ற நோக்கத்துடனும் இலக்கியம் படைத்தல்.**
7. **குறிப்பிட்ட எண்ணிகையில் பாடல் பாடும் ஆர்வமும் ஒரே வகை யாப்பைப் பயன்படுத்திப் பல பாடல்கள் இயற்றும் வேறுபட்ட நோக்கமும் செயல்பட்டமை.**
8. **மகளிர் விளையாட்டுகளை இலக்கியமாகப் படைத்தல் மட்டுமின்றி அவர்கள் உடல் ஊறுப்புகளை வருணிக்கும் நோக்கத்துடன் இலக்கியம் படைக்கும் எண்ணம் தோன்றியமை ஆகியனவாகும்.**

இதன் மூலம் சிற்றிலக்கியம் என்ற சொல் உணர்த்தும் பொருளினை அறியலாம்.

**சங்க இலக்கியங்களில் சிற்றிலக்கியக் கூறுகள்**

**பரணி**

96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்று பரணி .'பரணி' என்பதின் பெயர் காரணம் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன .இவை தொல்காப்பியர் கூறும் வனப்பில் 'விருந்து' ஆகும். மேலும் இலக்கண விளக்கம்

**ஆனை ஆயிரம் அமரிடை வென்ற**
**மானவனுக்கு வகுப்பது பரணி (இலக்கணவிள., பா. 13)**

என வரையறுக்கிறது. இதன் வித்து வெறி பாடிய காமக்கண்ணியார் பாடிய பாடலில் அமைந்துள்ளது.

**வெடிவேய் கொள்வதுபோல ஓடி**
**தாவுபு உகளும் மாவே பூவே**
**விளங்கு இழை மகளிர் கூந்தற் கொண்ட**
**நரந்தப் பல்காழ்க் கோதை சுற்றிய**
**ஐது அமைபரணி வணர் கோட்டுச் சீறியாழ்க்**
**கைவார் நரம்பின் பாணர்க்கு ஒக்கிய**
**நிரம்பா இயல்பின் கரம்பைச் சீறூர்**
**நோக்கினர்ச் செகுக்கும் காளை ஊக்கி**
**வேலின் அட்டகளிறு பெயர்த்து எண்ணின்**
**விண் இவர் விசும்பின் மீனும்**
**தண் பெயல் உறையும் உறை ஆற்றாவே (புறநானூறு, 302)**

மன்னனின் குதிரைகளின் ஆற்றலை பாணருக்கு அளிக்கும் கொடைத்தன்மையையும் பாடிய புலவர் அவனது வீரத்தைப் போற்றும் போது கொல்லும் காளையை ஒத்தவன், களிறென சினந்தெழுவான், போர்க் களத்தில் அவன் கொன்று குவித்த களிறுகளின் எண்ணிக்கை வானத்து மீன்களினும் மழைத் துளிகளினும் மிக்கவையாகும் என்று புகழ்கின்றார். இங்கு எண்ணிலடங்காத யானைகளைக் கொன்றுகுவிக்கும் பேராற்றல், வலிமையுடையவன் என்ற பரணி இலக்கியத்தின் அடிப்பொருள் இடம்பெறுவதை அறியலாம். பின்னாளில் இப்பரணி கலிங்கத்துப்பரணி, தக்கையாகப்பரணி, அஞ்ஞவதைப் பரணி எனத் தனி இலக்கியமாக வளர்ந்துள்ளதை அறியலாம்.

**தூது**

ஒருவரிடம் ஒரு செய்தியை சொல்லி வருவதற்கோ ஒரு பொருளை பெற்று வருவதற்கோ ஆற்றல் மிக்க மற்றொருவரை அனுப்புவது தூது ஆகும். இது தொல்காப்பியம் காலம் தொட்டே ஒரு இலக்கிய பிரிவாக இருந்து வருகின்றது. இது அகப்பொருள் பற்றியது, புறப்பொருள் பற்றியது என இரு வகையில் அடங்கும். மன்னர்கள் அனுப்புகின்ற தூது புறத்திணையில் அடங்கும். காதலர்கள் அனுப்புகின்ற தூது அகத்திணையில் அடங்கும். ஒரு தலைவன் மேல் காதல் கொண்ட தலைவி தன் காதல் நோயின் துயரத்தை காதலனுக்கு எடுத்துக்கூறி 'தூது சொல்லி வா" மாலை வாங்கி வா' என்று உயர்திணை பொருளேனும் அஃறிணை பொருளேனும்

தூது விடுவதாக பாடப்பெறும் இலக்கிய வகை ஆகும் .இதனை 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்பர். இதன் இலக்கணத்தை,

**ஓதல் பகையே துதிவை பிரிவே**
**அவற்றுள் ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன (தொல்., பொரு., பா. 30)**
**சொல்லாமரபின் அவற்றொடு கெழீஇச்**
**செய்யா மரபில் தொழில்படுத்தடக்கியும் (தொல்., பொரு., பா. 32)**

எனத் தொல்காப்பியர் வரையறுக்கிறார். இத்தூது இலக்கியக் கூறு சங்கப்பாடல்களில் இடம் பெறுகின்றது.

சங்கப்பாடல்களுள் அகத்துறைப் பாடல்களில் தாம் தூதுப் பாடல்கள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. தலைவன் தலைவி இருவருக்கும் ஒருவருக்கொருவர் தூது போக்கு நெறிகாணப்படுகிறது.தலைமகன் பிரிந்து நீட்டித்துழி நெஞ்சினைத் தூது விட்ட தலைமகள் அது வாராது தாழ்த்துழி, தோழிக்குச் சொல்லுவதாக பின்வரும் ஐங்குறுநூற்று பாடல் அமைந்துள்ளது.

**சூழ்கம் வம்மோ தோழி பாழ்பட்டுப்**
**பைதுஅற வெந்த பாலைவெங்காட்டு**
**அருஞ்சுரம் இறந்தோர் தேஎத்துச்**
**சென்ற நெஞ்சம் நீடியே பொருளே (ஐங்., பா. 317)**

இதன்வழி தலைவி தன் நெஞ்சைத் தூது விட்ட செய்தியை அறிகிறோம்.

அதியமான் நெடுமானஞ்சி என்னும் மன்னன் தன் பகையரசனான தொண்டைமானிடத்தில் ஔவையாரைத் தூது விடுத்த செய்தியை புறநானூற்றுப் பாடல் எடுத்துக் காட்டுகிறது.

**இவ்வே பீலி அணிந்து மாலைசூட்டி**
**கண்திரள் நோன்காழ்த்திருத்தி நெய் அணிது**
**கடியுடை வியல்நக ரவ்வே அவ்வே**
**பகைவர்க்குத்தி கோடுநுதி சிதைந்து**
**கொள்துறைக் குற்றில மாதோ என்றும்**
**உண்டாயின் பதம் கொடுத்து**
**இல்லாயின் உடன் உண்ணும்**
**இல்லோர் ஒக்கல் தலைவன்**
**அண்ணல் எம்கோமான் வைந்நுதிவேலே (புறநானூறு, 95)**

படைக்கலங்கள் பீலி அணியப் பெற்று மாலை சூட்டப்பெற்று அழகுபடுத்தி, நெய் தடவப்பட்டு, காவலுடன் உன் அரண்மனையில் உள்ளன. செல்வம் உளதாயின் உணவிட்டும் இல்லையெனில் பகிர்ந்து உண்டு மகிழும் வறியவர் விரும்பும் எம் தலைவனாகிய அதியமானின் படைக்கலன்கள் ஒடிந்தும் சிதைந்தும் முறிந்தும் பகைவரைத் தாக்குதலால் உருமாறியும் குலைந்தும் உலைக்களத்தில் இருக்கின்றன என்று சந்து செய்விக்கும் நோக்கில் ஔவையார் தானே தூது சென்றமையை இதன் வழி அறியலாம்.இதனை புறத்தூது வகையில் கொள்ளலாம். வெள்ளிவீதியார் பாடிய பாடலொன்று அகத்தூதிற்கு சான்றாக அமைகின்றது.

**சிறு வெள்ளாங்குருகே சிறு வெள்ளாங்குருகே**
**துறைபோகு அறுவைத்தூமடி அன்ன**
**நிறம்கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே**
**எம் ஊர்வந்து எம் உண்துறைத்துழைஇ**
**சினைக்கெளிற் ஆரிள்கையை அவர் ஊர் பெயர்தி**
**அனைய அன்பினையோ பெருமறவியையோ**
**ஆங்கண் தீம்புனல் ஈங்கண் பரக்கும்**
**கழனி நல்ஊர் மகிழ்நர்க்கு என்**

Academic Research News
*Peer-Reviewed Journal*
42
**Volume 3, SPL Issue 1, July 2025** **E-ISSN: 2584-167X**

**இழைநெகிழ் பருவரல் செப்பாதோயே (நற்றிணை, 70)**
இங்கு பிரிவுநோயால் துயருற தலைவி தலைவனிடம் வெளிய நாரையைத் தூது விடுத்து தன் துன்பம் நீங்க உதவுமாறு வேண்டுகிறாள்.சங்கப்பாடல்களில் அகம் புறம் துறைகளில் அமைத்துப் பாடப்பெற்ற தூது கிபி.17ம் நூற்றாண்டில் தனியொரு சிற்றிலக்கியமாக உருப் பெற்றுள்ளதை அறியலாம்.

**கார்**

பன்னிரு பாட்டில் குறிப்பிடும் கலம்பக உறுப்புகளில் ஒன்று கார். பொருள் காரணமாகப் பிரிந்த தலைவனை எண்ணி வாடும் தலைவி கார் காலத்தால் தனக்குண்டான துன்பங்களைக் குறித்துப் பாடுவதாக அமைவது. கார்காலம் பற்றி ஒக்கூர் மாசாத்தியார் குறுந்தொகையில் பின்வருமாறு பாடுகிறார்.

**இகாமை பாரார்ளம்நசைஇச் சென்றோர்**
**இவணும் வாரார் எவணரோ?என**
**பெயல் புறந்தந்த பூங்கொடி முல்லைத்**
**தொகுமுகை இலங்கு எயிறு ஆக**
**நகுமே தோழி! நறுந்தண்காரே (குறுந்தொகை, 126)**

அன்புத் தோழியிடம் பொருள் தேடச்சென்ற தலைவன் திரும்பிவராமையால் வருந்தி குளிர்ந்த கார்காலம் மழை பெய்வித்தலால் முல்லைப் பூங்கொடியில் அரும்புகள் ஒளிவீசி காட்சியளிக்கின்றன. அவை பற்களாக என்னைக் கண்டு நகைக்கின்றனவே எனத்தலைவி புலம்புகிறாள். முல்லைத் திணைக்கு உரிய பெரும்பொழுது கார்காலம்.இக்கார்காலப் பொழுது அகத்திணை மாந்தர்களின் வாழ்வோடு உணர்வோடு கலந்தது. இப்பொழுது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான கலம்பக உறுப்புகளுள் அமைந்து தனி இலக்கியமாக மலர சங்கப்பாடலில் வித்தாக அமைந்துள்ளதை அறியலாம்.

**குறத்திப் பாட்டு**

முத்தமிழில் ஒரு கூறான நாடக இலக்கியத்திற்கு சான்றாக விளங்குபவவை குறவஞ்சி இலக்கியம், பள்ளிலக்கியம், தொண்டி நாடகம் ஆகியன. இவற்றுள் குறவஞ்சி இலக்கியம் என்பது பாட்டுடை தலைவன் உலா வருவதை கண்டு காதல் கொண்டு காம வேதனையில் வாடி தவிக்கும் தலைவிக்கு குறத்தி ஒருத்தி குறி கூறுவதாக வரும் பொருள் அமைதியை கொண்டதாகும். பிற்காலத்தில் தனி இலக்கியமாக எழுதுவதற்கு முன்னரே இதன் இலக்கிய கூறுகள் தொல்காப்பியம் அகநானூறு, குறுந்தொகை, பெருங்கதை, திவ்ய பிரபந்தம், திருக்கோவை போன்ற இலக்கியங்கள் பல்கி கிடக்கின்றன. பன்னிருப்பாட்டியல் கூறும் குறத்திப்பாட்டே பிற்காலத்தில் குறவஞ்சி இலக்கியமாக வளர்ச்சி பெற்றது. இதனை

**கட்டினும் கழங்கினும் வெறியென இருவரும்**
**ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும் (தொல்., பா. 25)**

என தொல்காப்பியம் குறிபார்த்தல் பற்றிக் குறிப்பிடுகின்றது .

குறம், குறத்திப்பாட்டு, குறவஞ்சி எனப் பல பெயர்களில் சிற்றிலக்கியம் வளர்ந்துள்ளது. கலம்பக உறுப்புகளுள் வரும். குறம் என்பது தலைவி விரும்பிய தலைவனுடன் சேரும் வாய்ப்பினைக் குறமகள் ஒருத்தி குறி பார்த்து உரைப்பதாக வருவது. இக்குறத்திப் பாட்டின் வித்தினை ஔவையார் பாடிய அகப்பாடலில் காணலாம்.

**அகவன் மகளே! அகவன் மகளே!**
**மனவுக்கோப்பு அன்ன நல்நெடுங் கூந்தல்**
**அகவன் மகளே!பாடுக பாட்டே**
**இன்னும் பாடுக பாட்டே அவர்**
**நல் நெடுங்குன்றம் பாடிய பாட்டே (குறுந்தொகை. 23)**

தோழி, தலைவன் -தலைவி களவொழுக்கத்தை அறத்தொடு நிற்றல் துறை வழியாக நற்றாய்க்குத் தெரிவிக்க முனைகிறாள். குறத்தியை அழைத்து தலைவி விரும்பும் தலைவனின்

நல் நெடுங்குன்றத்தைப் பாடுக என அறிவுறுத்துகிறாள். தனிப் பெரும் இலக்கியமாக 18ம் நூற்றாண்டில் மலர குறத்திப்பாட்டு அடிப்படையாகின்றது என்பதை அறியலாம்.

**மடல்**

மடல் குறித்த செய்திகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாக இடம் பெற்றுள்ளது.மடல் ஏறுதல் மகளிர்க்கு இல்லை. ஆண்கள் தான் மடலேறுவேன் என அச்சுறுத்தவும் மடலேறவும் முயல்வான். அது மகளிர்க்குச் சிறப்புடையது அல்ல என்பதைத் *தொல்காப்பியம்,*

**எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மையான (தொல்., பா. 981)**

என குறிப்பிடுகின்றது. மடல் என்பது அகத்திணை சார்ந்த ஒரு துறையாக அமையினும் சிற்றிலக்கிய வரிசையில் இடம் பெற்றுள்ளது. திருமங்கை ஆழ்வார் பாடிய 'பெரிய திருமடல்' சிறிய திருமடலில்' பெண்கள் மடல் ஏறுவதாக இவ் பக்தி பாசுரங்கள் காட்டுகின்றன. மடல் பாடிய மாதங்கீரனார் என சங்கக்கால ஆண் புலவர் சிறப்பிக்கப்படுகிறார். அள்ளூர் நன்முல்லையார் குறுந்தொகையில் தலைவன் தலைவியின் பால் கொண்ட காதலால் மணம் புரியும் ஆவலில் மடல் ஏறுவதாக பாடுகிறார். மடல் ஏறினால் தலைவிக்குப் பழிநேரும். தான் அவலத்தில் உயிர் வாழ்ந்தால் தனக்கு பழியைத்தரும் என அமைந்த பாடல் பின்வருமாறு,

**காலையும் பகலும் கையறு மாலையும்**
**ஊர் துஞ்சு யாமமும் விடியலும் என்று இப்**
**பொழுது இடைதெரியின் பொய்யே காமம்**
**மா என மடலொடு மருகில் தோன்றித்**
**தெற்றெனத் தூற்றலும் பழியே**
**வாழ்தலும் பழியே பிரிவு தலைவரினே (குறுந்தொகை, 32)**

மடல் பற்றிய செய்தி சங்க இலக்கியங்களில் மிகுதியாக இடம் பெற்றுள்ளது. குறுந்தொகை, கலித்தொகை, திருக்குறள், வளையாபதி ஆகிய நூல்களிலும் மடல் குறித்த செய்தியை காண முடிகிறது. மடல் தனியொரு சிற்றிலக்கியமாக வளர்வதற்குச் சங்கப் பாடல்கள் முன்னோடியாக அமைந்துள்ளமை கண்கூடு.

**இயன்மொழி வாழ்த்து**

பாட்டுடைத் தலைவனின் இயல்பாக இருக்கும் பண்புகளைக் கூறி வாழ்த்துவது இயன்மொழி வாழ்த்து எனப்படும். புறநானூறு மற்றும் பதிற்றுப்பத்தில் வாழ்த்துப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

**அளிதோ தானே பாரியது பறம்பே**
**நளிகொள் முரசின் மூவிரு முற்றின்**
**உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே**
**ஒன்றே சிறியிலை வெரிதின் நெல்விளையும்மே**
**இரண்டே தீஞ்சுளைப் பழம்மூழ்க் கும்மே…**

**…ஆடினர் பாடினர் செலினே**
**நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே (புறம்., 58)**

என்னும் பாடலில் பாரியின் இயல்பான ஆட்சி சிறப்பையும், பாரியின் கொடை வள்ளல் தன்மையையும், அவனிடம் அடைக்கலம் சென்றவர்கள் கூறி வாழ்த்துகின்றனர்.

**விறலியாற்றுப்படை**

புறநானூற்றில் விறலியாற்றுப்படை என்ற வகையில் சில பாடல்கள் காணப்படுகின்றன. அதன் பின் ஆற்றுப்படை நூல்கள் பிற்காலத்தில் தோன்றத் தொடங்கின. பரிசுப் பெற்ற பாணன் முதலியோர் தாம் பெற்ற பெருஞ்செல்வத்தைத் தம் இனத்தைச் சார்ந்தவர்க்குக் கூறி தம்மைப் போல் மற்றவரும் பயன் பெறும் வகையில் தாம் பரிசுப் பெற்ற வள்ளல் அல்லது அரசனிடம் ஆற்றுப்படுத்துவது ஆற்றுப்படையாகும்.

திருமேனி இரத்தினக் கவிராயரின் புலவர் ஆற்றுப்படை, தொழுவூர் வேலாயுத முதலியாரின் நெஞ்சாற்றுப்படை, பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் இறையனார் ஆற்றுப்படை என இலக்கியங்கள் வளர்ந்துள்ளன. இதற்கான வித்தை ஔவையார் விறலியாற்றுப்படை என்றுப் பாடிய பாடல் புறநானூற்று நூலில் இடம்பெற்றுள்ளது. அப்பாடல்,

**ஒரு தலைப்பதலை தூங்க ஒருதலைத்**
**தூம்பு அகச்சிறுமுழாத் தூங்கத்தூக்கி**
**கவிழ்ந்த மண்டை மலர்க்குநர் யார்?எனச்**
**சுரன் முதல் இருந்த சில்வளை விறலி**
**செல்வை ஆயின் சேணோன் அல்லன்**
**முனைசுட எழுந்த மங்குல் மாப்புகை**
**மலைசூழ் மஞ்சின் மழகளிறு அணியும்**
**பகைபுலத்தோனே பல்வேல் அஞ்சி**
**பொழுது இடைப்படா அப் புலரா மண்டை**
**மெழுகு மெல் அடையின் கொழு நிணம் பெருப்ப**
**அலத்தற்காலை ஆயினும்**
**புரத்தல் வல்லன் வாழ்க அவன் தாளே (புறநானூறு, 102)**

அதியமான் நெடுமானஞ்சியின் விருந்தோம்பும் பண்பினை கொடைத் தன்மையை ஔவையார் விறலிக்கு எடுத்துரைத்து ஆற்றுப்படுத்துகிறார்.

**அந்தாதி**

தமிழ் இலக்கியத்திற்கு வடமொழியின் தாக்கத்தால் அமைந்தது அந்தாதி என்பர். இது ஒவ்வாத கூற்றாகும். அந்தாதி தனி இலக்கியமாக இல்லாவிடினும் புறநானூற்றில்,

**மண் தினிந்த நிலனும்**
**நிலன் ஏந்திய விசும்பும்**
**விசும்பும் தைவரு வழியும்**
**வளி தலைஇய தீயும்**
**தீ முரணிய நீரும் (புறம்., 2)**

என்று முரஞ்சியூர் முடிநாகராயர் பாடிய பாடலின் முதல் ஐந்து வரிகளில் அந்தாதி அமைப்பு இடம்பெறுவது நோக்கத்தக்கது. மேலும் சிறுபாணாற்றுப்படையில் விறலி வருணனை அந்தாதி யாப்பு வகையில் அமைந்துள்ளது. ஐங்குறுநூற்றின் தொண்டிப் பத்தும் அந்தாதி யாப்பில் காணலாம் .

**கையறு நிலை**

மனித இறப்பின் காரணமாக ஏற்படும் இழப்பு சோகமானதாகும். இத்தகைய கையறுநிலை பாடல்கள் சங்க இலக்கியங்களுள் மிகுந்து காணப்படுகின்றன. போர் அல்லது உடல் நலக்குறைவால் இறந்துபோன இனக்குழு தலைவன் அல்லது குறுநில மன்னன் அல்லது வேந்தனுக்கு ஏற்படும் வேதனையாகும். வீரத்தை காட்டி போராடி மாண்ட வீரனுக்காக நடப்பட்ட நடுகல்லை சோகத்துடன் பார்த்து வருந்துதல் . வடக்கிருத்தல் காரணமாக உயிர் இழந்தவன் குறித்து வருந்துதல்.

**அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்**
**எந்தையும் உடையோம் எம் குன்றும் பிறர்கொளா**
**இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்**
**வென்னெறி முரசின் வேந்தரெம்**
**குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே (புறம்., 112)**

மூவேந்தரும் முற்றுகையிட்டிருந்த அன்று இவ் வெண்ணிலவின் ஒளியிலே எம் தந்தையுடன் கூடி மகிழ்ந்தோம். இப்பறம்பு மலை எங்களுடையதாக இருந்தது. ஆனால் இன்று பகைவர் எம்

குன்றைக் கவர்ந்து கொள்ள நாங்கள் தந்தையை இழந்து தவிக்கிறோம் என தந்தையோடு இருந்த நாளை எண்ணி தனியே தவிக்கும் துயரை கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

மன்னர் இறந்தநிலையில் பாடப்பெறும் பாடல் கையறுநிலை என்பதாகும். நந்திவர்மன் மாண்ட கதை நாடறியும் எனும் பழமொழியும் உண்டு. நந்திக்கலம்பகத்தில் இடம்பெறும் கையறுநிலைப்பாடல் மனதை உருகச் செய்வது. அவல உணர்வை இழப்பினை வெளிப்படுத்தும் உருக்கமான கையறுநிலை என்னும் துறை சிற்றிலக்கியங்களுள் ஒன்றாக அமைகின்றது. அதியமான் நெடுமானஞ்சி இறந்த நிலையில் அவனது பிரிவை எண்ணி உருகிப் பாடும் கையறுநிலை ஔவையாரின் மூன்று பாடல்களிலும் பாரி வேந்தன் இறப்பினை எண்ணி அவர் மகளிர் (பாரிமகளிர்) பாடிய பாடலிலும் இடம் பெற்றுள்ளது. சான்றாக ஔவையாரின் பாடல் ஒன்றைக் காணலாம்.

**எறிபுனற் குறவன் குறையில் அன்ன**
**கரிபுற விறகின் ஈமஒள் அழல்**
**குறுகினும் குறுகுக குறுகாது சென்று**
**விசும்புற நீளினும் நீள்க பசுங்கதிர்த்**
**திங்கள் அன்ன வெண்குடை**
**ஞாயிறு அன்னோன் புகழ் மாயலவே (புறநானூறு, 231)**

ஈமத்தீயில் அதியமானின் இறந்த உடல் கிடக்கிறது. அந்தத்தீ அவனது உடலைச் சிதைக்காமல் குறையினும் குறைக. இல்லையெனில் குறையாமல் வானளவு முட்டச்சென்று நிறையினும் நிறைக. எனினும் திங்களைப் போன்ற வெண்கொற்றக்கொடைக் கொண்ட ஞாயிறு போன்ற அதியமானின் புகழ் என்றும் அழியாதது என மனமுருகிப்பாடுகிறார்.

கிள்ளிவளவனை பற்றி மாசாத்தனார், இரக்கமில்லாத எமனே! நீ அறிவற்றவன். வேறு வழியின்றி நீ விதைத்த நெல்லையே உண்டு ஏப்பம் விட்டுவிட்டாய். நான் சொல்லப்போகும் உண்மையை நீ போகப் போக உணர்வாய். வீரரும் யானைகளும் குதிரைகளும் இரத்த ஆறு ஓடும் போர்க்களத்தில் செத்து மடிய அன்றாட போரில் ஈடுபட்டு பல உயிர்களைக் கொண்டு உனது பசிக்கு இரையாக கொடுத்த ஆற்றல் உடையவன். உன்னைப் போன்று பொன் அணியையும் பொற்பூணும் பூண்ட கிள்ளிவளவன். வண்டுகள் மொய்க்கும் வெற்றி மலர்மாலை சூடிய என் தலைவனை கொன்று விட்டாயே! இனி உன் பசிக்கு யார் உணவு தருவார்? என்பதை,

**நனிபே தையே நயனில் கூற்றம்**
**விரகுஇன் மையின் வித்துஅட்டு உண்டனை**
**இன்னும் காண்குவை நன்வாய் ஆகுதல்**
**ஒளிறுவாள் மறவரும் களிறு மாவும்**
**குருதியங் குரூ உப்புனல் பொருகளத்து ஒழிய**
**நாளும் ஆனான் கடந்து அட்டு என்றுநின்**
**வாடுபசி அருந்திய பழிதீர் ஆற்றல்**
**நின்னோர்அன்ன பொன்னியல் பெரும்பூண்**
**வளவன் என்னும் வண்டுமூசு கண்ணி**
**இனியாள் மாற்றுநின் பசிதீர்ப்போரே (புறம்., 256)**

இப்பாடல் வழி அறியலாம். கையறுநிலையின் வித்து சங்கப் பாடல்களில் காணப்பெறுவதை அறியலாம்.

**முடிவுரை**

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள எண் வகை வனப்புகளில் விருந்து என்பது சிற்றிலக்கியம் தோன்ற களமாக விளங்கியுள்ளது. அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு உறுதிப்பொருளில் ஒன்றோ பலவோ குறைந்து தொடர்நிலை செய்யுளாக வாழ்வின் ஒரு பகுதியை மட்டும் பாடும் இலக்கியமாக சிற்றிலக்கியம் திகழ்கிறது இறைவன் மன்னன் குறுநில

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 3, SPL Issue 1, July 2025 E-ISSN: 2584-167X

மன்னன் கவிஞர்கள் அறிஞர்கள் வள்ளல்கள் போன்றோரை பாட்டுடை தலைவராகக் கொண்டு பாடப்படுவது தொல்காப்பியத்தில் சிற்றிலக்கியங்களுக்கான வித்துக்கள் காணப்படுகின்றன. அகத்தினை புறத்தினை மற்றும் அதன் துறைகளில் காணப்படும் வித்துக்களை கருவாகக் கொண்டு பல சிற்றிலக்கியங்கள் தோற்றம் பெற்று வளர்ந்துள்ளன. பிற்காலத்தில் தோன்றி சிறந்து விளங்கிய சிற்றிலக்கியங்களுக்கு வழிகாட்டியாக சங்க இலக்கியங்கள் இருந்துள்ளன. இச்சிற்றிலக்கிய கூறுகள் பிற்காலத்தில் சிற்றிலக்கியமாக விளங்குவதே காண முடிகிறது இதற்கு சான்றாக குறத்திப்பாட்டு போன்றவற்றை கூறலாம் சங்க இலக்கியங்களில் குறத்தி பாடுவதாக அமைந்துள்ள பாடலே பின்னர் குறம் என்னும் சிற்றிலக்கியம் தோன்ற காரணமாக அமைந்தது. இதில் தூது, உலா, பரணி, பிள்ளைத்தமிழ், அந்தாதி, ஆற்றுப்படை, கையறுநிலை, மடல், குறவஞ்சி போன்ற பல்வேறு இலக்கியங்களில் சான்றாக அமைந்துள்ளது காண முடிகிறது.

**குறிப்புகள்**

[1] ஈசுவரப்பிள்ளை, தா. *தமிழில் சிற்றிலக்கிய வரலாறு முதற்பகுதி* . 2005.
[2] சீனிவாசன், ரா. *தமிழ் இலக்கிய வரலாற்றுக் கட்டுரைகள்*. 1997.
[3] செல்வராஜ், நா. *இருபதாம் நூற்றாண்டுச் சிற்றிலக்கியங்கள்*. 2019
[4] தமிழண்ணல், *புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு*. 1980.
[5] மார்க்ஸ், அ. *சிற்றிலக்கியங்கள் சில குறிப்புகள்*. 2007.
[6] விமலானந்தம், மது. ச. *தமிழ் இலக்கிய வரலாறு*. 2004.
[7] *தமிழ் அடோன் அகராதி*. 2010.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.